நான்கு பேர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனால் 80 சதவீதம் கடத்தல் தற்போது குறைக்கப்பட்டுள்ளது. மேலும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவின்பேரில் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டதன் காரணமாக, இதுவரை 475 குற்றங்கள் பதிவு செய்யப் பட்டு, 265.009 டன் சந்தனக் கட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அதன் மதிப்பு ரூ. 4,73,36,000 ஆகும்.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே ,சென்னையில் எத்தனை பேர் கைது செய்யப்பட்டார்கள் என்று அறிய விரும்புகிறேன். மேலும் சில தினங்களுக்கு முன்பு, சந்தனக்கடத்தல் மன்னன் வீரப்பன் தர்மபுரி மாவட்டத்துக்கு வந்து, தன்னுடைய இறந்துபோன தங்கையின் உடலைப் பார்த்துவிட்டுச் சென்றதாக பத்திரிகையில் தகவல் வந்திருக் கிறது. இவர் தர்மபுரி மாவட்டத்துக்கு வந்து சில மணி நேரம் தங்கியிருந்திருக்கிறார். வனத் துறை காவல் அதிகாரிகள் ஏன் நட வடிக்கை எடுக்கவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இது தவறான தகவலாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) குறுகிய கால வினா.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : குறுகிய கால வினா என். 2—திரு. கு. லாரன்ஸ்—மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

2—

தக்கலையில் நேசமணி போக்குவரத்துக் கழகப் பணிமனை.

* 4497 திரு. கு. லாரன்ஸ் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தக்கலையில் அமைய விருக்கும் நேசமணி போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணி தடைப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1991 செப்டம்பர் 30]

(ஆ) ஆம் எனில், அதை நீக்கி விரைவில் பணிமனை தொடங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

(அ) & (ஆ) கன்னியாகுமரி மாவட்டம் தக்கலையில் அமையவிருக்கும் நேசமணி போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த தக்கலை, பத்மநாபபுரம் தொகுதியில் அமைந்துள்ளது. இது மாவட்டத்தின் மையப் பகுதி, பல்வேறு கல்லூரிகளும் மிகச் சிறந்த ஆலயங்களும் உள்ளன. பழம்பெரும் நகராகக் கருதப்படுகிறது. அந்த பத்மநாபபுரத்தில் அந்தப் பணிமனை ஆரம்பிக்கப்பட வேண்டிய அவசியமான சூழ்நிலை இருக்கிறது. பக்கத்தில் இருக்கிற கேரளாவிலிருந்து நிறைய பஸ்கள் வருகின்றன. நேசமணி போக்குவரத்துக் கழகப் பேருந்துகளையும், தமிழக அரசின் அனைத்துப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளையும் அங்குள்ளவர்கள் பெரிதும் போற்றுகிறார்கள். மகிழ்கிறார்கள். அங்கே உள்ள தனியார் நிலங்களை இந்தப் பணிமனைக்காக கையகப்படுத்துவதில் அங்குள்ள அதிகாரிகள் முழுப்பொறுப்பில் செயல்படவில்லை என்றே நான் கருதுகிறேன். எனவே நேசமணி போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில், பத்மநாபபுரம் சப்-கலெக்டர் அவர்களுக்கு தான் அதற்கான கோரிக்கைகளை அனுப்ப வேண்டும். எனவே அந்தக் கோரிக்கைகளை அனுப்புவதில் காலதாமதம் ஏற்படுவதாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. லாரன்ஸ் அவர்களே, வினாவாகக் கேளுங்கள்.

திரு. கு. லாரன்ஸ் : நேசமணிப் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில், போர்டு ஆப் டைரக்டர்கள் அந்த நடவடிக்கைகளை மிகத் துரிதமாக மேற்கொள்ள அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எண்ணிய எண்ணியாங்கு நடக்கின்ற நம்முடைய தமிழகத்தின் முதல்வர் இதயதெய்வம் புரட்சித்

தலைவி அவர்களின் ஆட்சியில் இதுபோன்ற காலதாமதம் ஏற்படாமல், விரைந்து செயலாற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல 31—10—1991-க்குள் 3 நிர்வாக இயக்குநர்கள் அங்கே சென்று பார்வையிட்டு அந்த இடத்தைத் தேர்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-35

திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கனிவான இந்த பதிலுக்கும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் என்னுடைய நன்றியை குமரி மாவட்ட மக்கள் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன். இதைச் சொல்கிற நேரத்தில் சிறிய அபிப்பிராயத்தையும் சொல்ல ஆசைப்படுகிறேன. நேசமணி போக்குவரத்துக் கழகம், குமரி மாவட்டத்தின் 80 சத மக்களுடைய போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்கிறது. ஆகவே இன்னும் கொஞ்சம் வசதிகள்தான் செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இப்போது அந்தத் துறை சிறிது நஷ்டத்தில் இருந்தாலும் கூட, அந்த நஷ்டத்தைப் பாராது, இந்தத் துறையை அரசே தொடர்ந்து நடத்த வேண்டுமென்று வேண்டிக் கொள்வதோடு, எந்தக காரணத்தைக் கொண்டும் கன்னியாகுமரியில் இத் துறையை தனியாருக்கு விட்டுவிடக் கூடாது என்ற ஆலோசனையையும் இந்த மன்றத்தில் எடுத்து வைத்து, நன்றி சொல்லி அமைகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில், தனியாருக்கு நேசமணி போக்குவரத்துக் கழகத்தை விட்டுவிடக் கூடாது என்று சொன்னார்கள். அந்த எண்ணம் இந்த அரசுக்கு எப்போதும் இல்லை என்பதை நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அன்றைக்கே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே 80 சதவீதம் மக்களுக்கு பேருந்து வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல மாண்புமிகு இதய தெய்வம், முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் எனக்கு ஆணை பிறப்பித்

இருக்கிறார்கள். ஓராண்டுக் காலத்திலே மாண்புமிகு உறுப்பினருடைய என்னைக் கனவுகள் நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(அ) முதல் துணை மதிப்பீடுகள் 1991-92, மொழிதல். (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1991-92 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகள் குறித்த அறிக்கையை பேரவையில் அளிப்பதற்கு ஆளுநர் அவர்கள் 1991 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1 ஆம் நாள் செவ்வாய்க் கிழமையைக் குறித்துள்ளார்கள்.

3. கவன ஈர்ப்பு.

(அ) நாங்குநேரி தொகுதியில் உள்ள விஜயநாராயணபுர ஏரியின் மடைகள் சேதமடைந்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வைக் குறித்த கவன ஈர்ப்புகள். திரு. வெ. நடேசன் பால்ராஜ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. வெ. நடேசன் பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய நாங்குநேரி தொகுதியில் விஜயநாராயணபுர ஏரி என்று ஒரு ஏரி உள்ளது. அந்தப் பெரிய ஏரி மிகவும் சேதம் அடைந்திருக்கிறது.